DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW8 |
| Name | : | நந்தகுமார் |
| Father's Name | : | |
| Village | : | போத்திநாயனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | மேஸ்திரி |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 21st day of August 2025.

எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது போத்திநாயனப்பள்ளியில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் சாட்சியாக உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.5** (4 வரிசைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஓசூரில் இருந்து எங்கள் ஊரான போத்திநாயனப்பள்ளிக்கு இரு சக்கர வாகனத்தில் சென்ற போது, ஜீஸ் பேக்டரி அருகில் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக போட்டேன் என்றால் நானும் கேட்கவில்லை, அவர்களும் சொல்லவில்லை. நான் மட்டும் கையெழுத்து போட்டேன்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

நான் போலீசார் விசாரணையில் 13.11.2019 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு மகாராஜா கடை காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற

எண்.317/2019, U/s.394 IPC வழக்கில் கிருஷ்ணகிரி – மகாராஜா கடை செல்லும் ரோட்டில் ஆத்துக்கானூர் செல்லும் வழியே ஆஜர் எதிரிகள் வைத்து விசாரணை செய்து கொண்டிருந்தார் என்றும், அதில் எதிரி சேரன், அருண்குமார் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அதனை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அதனை தொடர்ந்து எதிரி சுமனிடம் இருந்து TN 24 Q 8182 என்ற Discover motor வண்டியை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், TN 24 AM 1751 என்ற yamaha FZ மோட்டார் வண்டியை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதன் பிறகு 10.30 மணிக்கு எதிரி சேரன் குப்பமேட்டு தெரு, பழையபேட்டையில் அவர் வீட்டில் இருந்த சூட்கேசில் மறைத்து வைத்திருந்த பணம் ரூ.25,000/– வும், சுமார் 2 அடி நீளம் உள்ள கட்டை ஒன்றையும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், பிறகு 11.30 மணிக்கு எதிரி அருண்குமார், வத்தல்பேட்டை காலணி, அவன் வீட்டில் பெட்டியில் மறைத்து வைத்திருந்த ரூ.15,000/–, மற்றும் கத்தி, கருப்பு கலர் vivo செல்போனையும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் நானும், சின்னசாமி மகன் மகேந்திரன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம் என்று விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து மாற்றி போய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW9 |
| Name | : | மகேந்திரன் |
| Father's Name | : | சின்னராமநாயுடு |
| Village | : | மாதிநாயனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 21st day of August 2025.

எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது மாதிநாயனப்பள்ளியில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.8 நந்தகுமாரைத் தெரியும். எதிரிகளை தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் சாட்சியாக உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் மாதேனபள்ளியில் இருந்து கிருஷ்ணகிரிக்கு இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். மகாராஜா கடை போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். எதற்காக போட்டேன் என்றால் நானும் கேட்கவில்லை, அவர்களும் சொல்லவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அந்த கையெழுத்து **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.7** (4 வரிசைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

நான் போலீசார் விசாரணையில் 13.11.2019 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு மகாராஜா கடை காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற

எண்.317/2019, U/s.394 IPC வழக்கில் கிருஷ்ணகிரி – மகாராஜா கடை செல்லும் ரோட்டில் ஆத்துக்கானூர் செல்லும் வழியே ஆஜர் எதிரிகள் வைத்து விசாரணை செய்து கொண்டிருந்தார் என்றும், அதில் எதிரி சேரன், அருண்குமார் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அதனை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அதனை தொடர்ந்து எதிரி சுமனிடம் இருந்து TN 24 Q 8182 என்ற Discover motor வண்டியை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், TN 24 AM 1751 என்ற yamaha FZ மோட்டார் வண்டியை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதன் பிறகு 10.30 மணிக்கு எதிரி சேரன் குப்பமேட்டு தெரு, பழையபேட்டையில் அவர் வீட்டில் இருந்த சூட்கேசில் மறைத்து வைத்திருந்த பணம் ரூ.25,000/– வும், சுமார் 2 அடி நீளம் உள்ள கட்டை ஒன்றையும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், பிறகு 11.30 மணிக்கு எதிரி அருண்குமார், வத்தல்பேட்டை காலனி, அவன் வீட்டில் பெட்டியில் மறைத்து வைத்திருந்த ரூ.15,000/–, மற்றும் கத்தி, கருப்பு கலர் vivo செல்போனையும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் நானும், நந்தகுமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம் என்று விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து மாற்றி போய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.